முத்தமிழறிஞர் கலைஞரின் 5ஆம்ஆண்டு நினைவு நாள் :

# முதல்வர் தலைமையில் அமைதிப் பேரணி! சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தினர் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

சென்னை, ஆக. 7 -

தமிழ்த் தாய் பெற்றெடுத்த தவப்புதல்வர், மாற்றாரும் போற்றுகின்ற மகத்தான தலைவர், இந்திய அரசியலின் இமயம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி அவருக்கு மரியாதை செலுத்துகிற வகையில் கழகத்தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் இன்று (07.08.2023) காலை சரியாக 8.00 மணி அளவில் அமைதிப் பேரணி நடைபெற உள்ளது.

ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனை அருகில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவருவச் சிலையில் இருந்து கலைஞர் நினைவி



டம் நோக்கி செல்கின்ற இந்த அமைதிப் பேரணியில், சென்னைத் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பகுதி மற்றும் ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள்,வட்டக் கழக செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், இளைஞரணி, மகளிரணி, மாணவரணி, மகளிர் தொண்டர் அணி, தொழிலாளரணி, தொண்டரணி, தொழில் நுட்ப அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, இலக்கிய அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, மீனவரணி, நெசவாளர் அணி, வர்த்தகர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி,மருத்துவர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆட்டோ ஓட்டுனர் அமைப்பு தொ.மு.ச உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் கழகத்தின் அனைத்து நிலை சார்ந்த செயல்வீரர்கள், வீராங்கனைகள் அனைவரும் பெருமளவில் பங்கேற்று, ஆருயிர்த் தலைவர் கலைஞர் அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்திட வேண்டுகிறேன்.

அதனைத் தொடர்ந்து காலை 10 மணி அளவில், சைதை பஜார் சாலையில் அமைந்துள்ள மாவட்டக்கழக அலுவலகத்தில் கலைஞருக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும் என்று மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

ஐதராபாத் விமான நிலையத்தில்

## ரூ.2.29 கோடி மதிப்பிலான கடத்தல் தங்கம் பறிமுதல்

ஐதராபாத், ஆக.7-

ஐதராபாத் விமான நிலையத்திற்கு வரும் விமானங்களில் தங்கம் கடத்தப்படுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் சுங்கத்துறை அதிகாரிகள் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். அப்போது துபாயில் இருந்து வந்திறங்கிய பயணி ஒருவர் தனது உள்ளாடையில் ரூ.1.18 கோடி மதிப்பிலான 1.924 கிலோ தங்கத்தை மறைத்து வைத்து கடத்தி வந்தது தெரியவந்தது.

இதே போல் ஜெட்டா நகரில் இருந்து வந்திறங்கிய இரண்டு பயணிகள் தங்கத்தை கடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளிலிருந்து பொதுமக்கள் மற்றும் கழகத் தோழர்கள் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பல்வேறு கோரிக்கை மனுக்கள் வழங்கப்பட்டு வந்த நிலையில் திருத்தணி தொகுதியை சேர்ந்த கழக தோழர் ராஜசேகர் அவர்களின் மகன் மேல் படிப்பிற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன்.எம்.எல்.ஏ ரூ 10.000 உதவி தொகை வழங்கினார் அருகில் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு - அப்போலோ மருத்துவமனை -

# திருச்சி தெற்கு மாவட்ட மருத்துவர் அணி சார்பில் மருத்துவ முகாம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி துவக்கி வைத்தார்! டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ சிறப்புரை!

திருச்சி, ஆக.9-

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க மருத்துவர் அணி மற்றும் அப்பல்லோ மருத்துவமனை இணைந்து நேற்று இலவச மருத்துவ முகாமினை திருச்சி சத்திரம் பேருந்து நிலையம், இந்திரா காந்தி கல்லூரி வளாகத்தில் நடத்தின.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, குத்துவிளக்கேற்றி இந்நிகழ்வை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவ அணி மாநிலச் செயலாளர் எழிலன் நாகநாதன், மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர். திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. மருத்துவர் அணி மாவட்டத் தலைவர் டாக்டர் தமிழரசன், மாவட்ட அமைப்பாளர் டாக்டர் சுரேஷ் பாபு, டாக்டர்கள் பால்வண்ணன், முகமது மன்சூர், சந்தோஷ் குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏற்பாட்டில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

முகாமில் ரத்த அழுத்தம், ரத்த சர்க்கரை அளவு, ஹீமோகுளோபின் ரத்த அளவு சரிபார்த்தல், இ.சி.ஜி,எக்கோ கார்டியோகிராம், நுரையீரல் PFT சோதனை, LIVER FIBRO Scan, Bone Mineral Dencity உள்ளிட்ட பல்வேறு வகையான பரிசோதனைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. இம்முகாமில் பொதுமக்கள் பங்கேற்றனர்.

முகாமினைத் தொடர்ந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மருத்துவத் துறைக்கு ஆற்றிய சேவைகளும் சாதனைகளும் குறித்த ஆங்கில கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கையும் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்.

இந்தக் கருத்தரங்கில் அழைப்பாளராக ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில்

# கலைஞர் நினைவுநாள் அமைதி ஊர்வலம்! படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிவிப்பு!

நாகை. ஆக. 7-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட உள்ள தீர்மானங்கள் குறித்தும் மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பேசினார். கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கொள்ளிடம் மேற்கு செல்ல.சேதுரவிக்குமார், கொள்ளிடம் கிழக்கு மலர்விழிதிருமாவளவன், மயிலாடுதுறை வடக்கு என். இளையபெருமாள், மயிலாடுதுறை மத்தியம் ஞான. இமயநாதன், மயிலாடுதுறை கிழக்கு ப.முருகமணி, மயிலாடுதுறை மேற்கு மூவலூர் மூர்த்தி, செம்பனார்க்கோயில் வடக்கு பி.எம். அன்பழகன், செம்பனார்கோயில் தெற்கு எம்.அப்துல்மாலிக், செம்பனார்கோயில் மத்தியம் அமிர்த. விஜயகுமார், குத்தாலம் கிழக்கு மங்கை எம்.சங்கர், குத்தாலம் வடக்கு கு.வைத்தியநாதன், குத்தாலம் மேற்கு ஏ.ஆர்.ராஜா, சீர்காழி மேற்கு ஏ.ஜி.ஜெ.பிரபாகர், சீர்காழி கிழக்கு நெப்சுகுமார், நகரக் கழகச் செயலாளர்கள் மயிலாடுதுறை குண்டாமணி (எ) என்.செல்வராஜ், சீர்காழி ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் வைத்தீஸ்வரன்கோயில் எம்.அன்புச்செழியன், குத்தாலம் எம்.சம்சுதீன், தரங்கம்பாடி முத்துராஜா, மணல்மேடு அண்ணாதுரை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மருது, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் தேசப்பன், கொள்ளிடம் ஒன்றியக் குழு தலைவர் ஜெயபிரகாஷ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

13 வயதில் தமிழுக்காக கொடி பிடித்து 80 ஆண்டு காலம் பொதுவாழ்க்கை, 13 முறை சட்ட மன்ற தேர்தலில் போட்டியிட்டு 13 முறையும் வெற்றி பெற்று சட்ட மன்றத்தில் 60 ஆண்டு காலம் பணியாற்றி 5 முறை 20



ஆண்டுகாலம் தமிழ்நாடு முதல்வராக இருந்து தமிழ்நாட்டிற்கும் முக்கும், தமிழ்நாட்டிற்கும் பாதுகாவலராக இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கழகத் தலைவராக 50 ஆண்டுகாலம் இருந்து கழகத்தை கட்டிகாத்த கலைஞர் அவர்களின் 5ம் ஆண்டு நினைவு நாளான இன்று காலை மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் அமைதி ஊர்வலம் நடத்தி கலைஞர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும் என்றும், அனைத்து ஒன்றிய, நகர, பேரூரில் உள்ள கிளை, வார்டுகள் தோறும் கழகத்தினர் கலைஞர் திருவுருவப் படம் வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும் இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் செய்திட வேண்டும் என்றும், கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர் சட்ட மன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் சார்பில் கலைஞர் திருவுருவச் சிலை அமைக்க அனைத்து ஏற்பாடுகளை செய்து முதற்கட்டமாக ஒன்றிய, நகர, பேரூரில் தலா ஒரு இடத்தில் கலைஞர் சிலை அமைக்கும் பணியில் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் இந்த பணியை இப்போதே தொடங்கிட வேண்டும் என்றும்,

ராமேஸ்வரத்தில் வரும் அன்று நடைபெற உள்ள மீனவர்அணி மாநாட்டில் மயிலாடுதுறை மாவட்டத்தில் இருந்து 3000 பேர் கலந்து கொள்ள செய்வது என்றும்,

மயிலாடுதுறை மாவட்டத்தில் தற்போது குறுவை நெல் அறுவடை தொடங்கியுள்ள நிலையில் விவசாயிகளின் நலன் கருதி குறுவை நெல்லை அரசே கொள்முதல் செய்ய அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறந்திட உத்தரவிட்டு, நெல் கொள்முதலை தொடங்கிட்ட கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

பராமரிப்புப் பணிகள்!

# ஸ்டெர்லிங் சாலையில் குடிநீர் வினியோகம் நிறுத்தம்!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை,ஆக.6-

கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் எடுத்துச் செல்லும் 1050 மிமீ விட்டமுள்ள பிரதான உந்து குழாயுடன் 900 மிமீ விட்டமுள்ள பிரதான உந்து குழாயை இணைக்கும் பணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) ஸ்டெர்லிங் சாலையில் மேற்கொள்ளப்படுவதால் 08.08.2023 அன்று காலை 06.00 மணி முதல் 09.08.2023 காலை 06.00 மணி வரை மண்டலம்-9(தேனாம்பேட்டை), மண்டலம்-10(கோடம்பாக்கம்) மற்றும் மண்டலம்-13(அடையாறு) க்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம்9 (தேனாம்பேட்டை), நுங்கம்பாக்கம், ஆயிரம் விளக்கு, தியாகராய நகர், தேனாம்பேட்டை, ஆழ்வார்பேட்டை

மண்டலம்10 (கோடம்பாக்கம்), தியாகராய நகர், கே.ஜி நகர், சைதாப்பேட்டை மண்டலம்13 (அடையாறு) சி ன் ன மலை எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்த தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும் என்று குடிநீர் வாரியம் அறிவித்துள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் மறைந்த ஜெ.அன்பழகன், மறைந்த முன்னாள் மாவட்ட பிரதிநிதி க.ரமேஷ் நினைவு நாளை முன்னிட்டு மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி, தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. வேண்டுகோளுக்கிணங்க, (நேற்று 06.08.2023) தியாகராயர் நகர் கிழக்கு பகுதி 134அ வட்டத்திற்குட்பட்ட ஈஸ்வரன் கோவில் காந்தி தெரு சந்திப்பில் மறைந்த முன்னாள் மாவட்ட பிரதிநிதி க.ரமேஷ் அவர்களின் முத்த சகோதரர் க.செல்வம் ஏற்பாட்டில் பகுதிவாழ் பொதுமக்களுக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும் சென்னை பெருநகர மாநகராட்சி நியமன குழு உறுப்பினருமான ராஜா அன்பழகன் எம்.சி. கலந்துகொண்டு அறுசுவை உணவினை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ.ஜானகிராமன், அ.வாசுதேவன், தி.மு.அம்பேத்கர், சென்னை தென்மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நலப்பிரிவு அணியின் அமைப்பாளர் ஜெ.எஸ்.ஆர். ஜெகன்ராஜ் தியாகராயர் நகர் மேற்கு பகுதி துணைச் செயலாளர் சாந்தி பங்காரு, மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ராமலிங்கம், சாலி, கே.மோகன், மூர்த்தி, எஸ்.இளங்கோ, ரா.முகுந்தன், என்.ஜி.மு.வேலு, கே.கண்ணன், எம்.டி.ஆர். பிரகாஷ், சுசீம்பாய் பி.பாபுதேவ், சீயோன் ராஜா, எம்.வெற்றிவேல், எம்.சதாதுரை, பி.சுந்தரமூர்த்தி, எஸ்.ஆர். விவேகானந்தன், பி.டி.சி.கணபதி, பாஸ்கர் ஆட்டோ மூர்த்தி, அர்ஜுனன், ஆர்.வேலகேஷ், ஜி.வரதராஜன், எம்.ஆர். பாலசுந்தரம், எஸ்.பி.ஜெய்சங்கர், பி.டி.சி.முருகன், கே.தினேஷ்பாபு, ஜே.மோகன், போட்டோ கார்த்திக், மார்க்கெட் புலி, கார்த்திக், ஆர்.பாலாஜி, மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பூண்டி மேற்கு ஒன்றிய அவைத்தலைவர்

## பட்டரை கே. பாஸ்கரன் தாயார் கே. சகுந்தலம்மாள் மறைவு!

எஸ்.சந்திரன்- வி.ஜி.ராஜேந்திரன் - அஞ்சலி

திருவள்ளூர் ஆக் 07; -

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பூண்டி மேற்கு ஒன்றிய அவை தலைவர் பட்டரை கே.பாஸ்கரன் தாயாரும் ஒன்றிய கவுன்சிலர் சுபாஷினி பாஸ்கரன் மாமியாரும் மான கே.சகுந்தலம்மாள் அவர்கள் உடல் நலக்குறைவால் நேற்று முன்தினம் மாலை 3 மணி அளவில் இயற்கை எய்தினார் தகவல் அறிந்த திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன்.எம். எல்.ஏ திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் ஆகியோர் நேரில் சென்று மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்கள்.மேலும் கழக சொந்துக்குழு பாதுகாப்பு துணை தலைவர் இ.ஏ.பி.சிவாஜி, தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், ப.சிட்டிபாபு, பூண்டி ஒன்றிய குழு துணை தலைவர் மகாலட்சுமி மோதிலால், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் சி.சுரவிச்சந்திரன், கூளூர் எம்.ராஜேந்திரன், கே.அரிகிருஷ்ணன், எஸ்.மகாலிங்கம், திருத்தணி வி.வினோத்குமார், ஜான் (எ) பொன்னுசாமி, முன்னாள் நகர் மன்ற தலைவர் பொன் பாண்டியன் மற்றும் நிர்வாகிகள் தி.ஆ.க ம ல க் க ண் ண ன், டி.மோதிலால், டி.கே.பாபு, கு.பிரபாகரன், எம்.எம்.லிங்கேஸ், வி.எஸ்.சதீஷ் குமார், ஜெ.கருணாநிதி, குணசேகரன், பேருஞ்சேரி ரவி, காஞ்சிபாடி சரவணன், ஆனந்த், சித்ரா ரமேஷ், சௌக்கர், த.நடராஜன், மோசஸ், நம்பாக்கம் வேணு, மற்றும் ஒன்றிய குழு தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பலர் அஞ்சலி செலுத்தினார்கள்

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாடிப்பட்டியில் கலைஞர் நினைவு தின அமைதிப் பேரணி!

## நலத்திட்ட உதவிகள் வழங்கல்! மாவட்ட செயலாளர் அமைச்சர் அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, ஆக. 7-

மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வாடிப்பட்டியில் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., முன்னிலையில் அமைதி பேரணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளதாக அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார், அதன் விபரம்.

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், செம்மொழி கண்ட நாயகர், முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக வாடிப்பட்டியில் இன்று (07.08.2023 திங்கள் கிழமை) காலை 9மணிக்கு அமைதி பேரணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கல் நடைபெறுகிறது. வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், மாவட்ட துணை செயலாளர், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் முன்னிலையில் வாடிப்பட்டி பழைய நீதிமன்ற வளாகம் அருகில் இருந்து அமைதி பேரணி துவங்கி வாடிப்பட்டி அண்ணா பேருந்து நிலையம் வரை சென்று முடிவடைகிறது. அதனை தொடர்ந்து பேரறிஞர் அண்ணா சிலை முன்பாக அமைக்கப்பட்டுள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது. பின்னர் ஏழை எளியோர் மற்றும் நலிந்த கழகத்தினருக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட உள்ளது.

இந்த பேரணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின்



அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் என அனைவரும் பெருந்திரளாக பங்கேற்க வேண்டுமென வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி. மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

45-வது வட்ட தி.மு.க சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு தினம்!

## தா.இளைய அருணா - கலாநிதி வீராசாமி - ஆர்.டி சேகர் பங்கேற்பு! ஜி.மாரிமுத்து அறிக்கை!

சென்னை,ஆக.7-

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 45வது வட்ட தி.மு.க சார்பாக பி.வி.காலனியில் அமைந்துள்ள ரவுண்டானாவில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துதல் நிகழ்வு நடைபெறுகிறது.

அது சமயம் சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சி நகரமைப்பு நிலைக்குழு தலைவர் தா. இளைய அருணா மற்றும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி. சேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி, பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க.ஜெயராமன் மாநில பொறியாளர் அணி துணைசெயலாளர் இரா. நரேந்திரன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் வட்ட கழக நிர்வாகிகள் அணைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், B L A_2 நிர்வாகிகள், கழக முத்த முன்னோடிகள், டாக்டர் கலைஞரின் அவர்களின் உயிரினும் மேலான கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 45வது வட்ட தி.மு.க. வட்ட செயலாளர் ஜி.மாரிமுத்து கேட்டுக் கொண்டுள்ளார்.

கழகத் தலைவர் தலைமையில் அமைதிப் பேரணி!

# சேப்பாக்கம் பகுதிக் கழகத்தினர் பங்கேற்பீர்!

## பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் அறிக்கை!

சென்னை, ஆக.7-

சேப்பாக்கம் பகுதி செயலாளரும், 9-வது மண்டலக்குழு தலைவருமான எஸ். மதன் மோகன் அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இன்று (7-ஆம் தேதி, திங்கட்கிழமை) காலை 8.00 மணி அளவில் ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை அருகில் இருந்து மெரினாவில் உள்ள நினைவிடத்திற்கு மாபெரும் அமைதிப் பேரணி நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் சேப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, பகுதி, வட்ட, அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தலைமையில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி

## புழல் எம். நாராயணன் வேண்டுகோள்

சென்னை, ஆக. 7-

இந்திய அரசியல் வரலாற்றில் பல பிரதமர்களை உருவாக்க காரணமாக இருந்தவர், பல ஜனாதிபதிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர், தமிழ்நாட்டு மக்களுக்கு தன் வாழ்நாளெல்லாம் அர்ப்பணித்த முத்தமிழ் அறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சென்னை அண்ணா சாலையில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவ சிலை அருகே இருந்து, மாபெரும் அமைதிப் பேரணி இன்று 7. 8. 2023 காலை 7 மணி அளவில் புறப்பட்டு காமராஜர் சாலையில் உள்ள கலைஞர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தி முடிவு பெற உள்ளது.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எம் எல் ஏ அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட ,பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் செயல் மறவர்கள் திரளாக கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாள் அமைதி பேரணியில் அணிவகுத்து சென்று, கலைஞர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தும் திரளாக வருகை தர வேண்டுமென மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கேட்டுக் கொண்டுள்ளார்